Koviloor Digital Library

உ

அருள்மிகு

கற்பக விநாயகர்

KOVILUR MADALAYAM
KOVILUR-630 307
MANAGIRI VIA

Acc. No.
4511

4511

தமிழ் அருச்சனை வழிபாடு

Koviloor Digital Library

தமிழ் அருச்சனை

இயற்றித் தந்தவர்

முத்தமிழ்ப் புலவர்

தமிழ்க் கடல்

சிவம் பெருக்கும் சீலர்

திரு

இராய. சொ. அவர்கள்

Koviloor Digital Library

அருள்மிகு

கற்பகவிநாயகர்

★ KOVILOOR ANDAVAR LIBRARY, KOVILOOR ★
1151

உலகின் முதல் பிள்ளையார்
உயர்வு நல்கும் கற்பகம்!

வளம் மிகுந்த வாழ்வினை
வழங்கும் காம தேனுவே!

Koviloor Digital Library

வாழ்த்துரை

சென்னை லலிதா நகை மாளிகை உரிமையாளர் திரு. எம். எஸ். கந்தசாமி அவர்கள் தன் மணிவிழாவைச் சிறப்பித்து அருள்மிகு கற்பகப் பெருமானைப் பக்தர்கள் தன்தாய் மொழியாலே வழிபட 108 போற்றிகளைத் திரட்டித் தமிழ் அருச்சனை செய்ய நூல்வடிவமாக்கி வெளியிடுவதைப் பாராட்டுகிறோம்.

தமிழ் அருச்சனை செய்வது ஒருவன் தன் தாய்மொழியிலே வணங்கவேண்டும் என்பது நமது குறிக்கோள்.

நமது வாழ்த்துக்கள் மணிவிழாக்கண்ட திரு. எம். எஸ். கந்தசாமி அவர்களுக்கு உரித்தாகுக.

குன்றக்குடி அடிகளார்

Koviloor Digital Library

சிவ சிவ

சில வார்த்தைகள்

எல்லாம் வல்ல சிவபெருமான் திருவாலயங்களில் முதற் கடவுளராக வீற்றிருப்பவர் விநாயகப் பெருமான். அவர் தமிழகத்தில் முதலிடமாகப் பிள்ளையார்பட்டியில் வீற்றிருந்து மக்களுக்கு வேண்டுவன வழங்கும் வள்ளல் பெருமானுகக்காட்சி யளித்துத் திருவருள் புரிந்துவருகிருர்.

அப்பெருமானைத் தேனினுமினிய தமிழ்மொழியிலே வணங் கும்பொருட்டுச் சிவம் பெருக்கியசீலர். முத்தமிழ்ப் புலவர் தமிழ்க்கடல் ராய சொ அவர்கள் இயற்றிய 108 போற்றிகளில் வழிபாடு செய்வது தமிழ் மொழியின்பால் நாம் கொண்டுள்ள தாய்மொழியின் பற்றினைக் காட்டும் சிறப்பாகும்.

Koviloor Digital Library

இவ்வுலகில் நன்மையை விரும்பாதார் யாருமிலர் பிள்ளையார் பட்டியில் உறையும் அருள்மிகு கற்பகமூர்த்தியை வழிபடுபவர்கள் வாழ்வில் மென்மேலும் உயர்வதைக் கண் கூடாகக் காண்கிறோம். இப்பெருமானைமேலும் வழிபாடுசெய்து திருவருளைப்பெற இந்நூல் உதவியாகயிருக்கும்.

இந்நூல் சென்னை லலிதா நகை மாளிகை உரிமையாளர் திரு. எம். எஸ். கந்தசாமி அவர்களின் மணிவிழாவைச் சிறப் பித்துப் பக்தர்களுக்கு வழங்கப்பெறுகிறது.

இப்பாக்களை ஓதி உணர்ந்து பிள்ளையார்பட்டி பெரும் பதிக்கு அரசாரக வீற்றிருந்து வேண்டுவோர்க்கு வேண்டுவன தரும் வள்ளலான அருள்மிகு கற்பகப்பெருமானை வழிபாடு செய்து திருவருள் பெறுவார்களாக.

Koviloor Digital Library

''கற்பகம் நினைத்தால் கனவும் நிறைவேறும்
சிற்பர மோனத் தவம் கூடிவரும்
வந்த கவலை தீர்க்கும் விநாயகன் இவனே''

என்றும் வேண்டும் இன்ப அன்பு

கண்டவராயன்பட்டி
பிரஜோர்பத்தி
ஆவணி30, 15-9-91

நா. அருணாசலன்
செயலாளர்
அருள்நெறித் திருக்கூட்டம்

Koviloor Digital Library

கற்பக விநாயக வணக்கம்

பல்லவி

அற்புதங்கள் பல செய்யும் கற்பக விநாயகா!—நின்
பொற்பதங்கள் பணிந்தோரின் நலமெண்ணும் நாயகா!

அநுபல்லவி

பிள்ளையார் பட்டிதனில் புனிதத்தின் தோற்றமே!—என்
உள்ளத்துத் தளத்தினில் உறைத்திட்ட ஏற்றமே!

சரணம்

திருவீசர் பக்கம் வளர் திருமிகு செல்வமே!
திருச்சென்னி;தனில் சடை ஏற்றிருக்கும் தெய்வமே!
கைத்தலத்தில் சிவலிங்க ஆராதனை செய்வோனே!

Koviloor Digital Library

மெய்த்தளத்தில் நல்லெண்ணம் ஈடேற வைப்போனே!
உடல் நலம் வேண்டுவோர்க்கு உளமுருகி அருள்வோனே!
அடிமலர் தொழுவோர்க்கு அன்பினிய ஐங்கரனே!
தொழில் வளம் நாடி வந்தால் துணையாகி நிற்பவனே!-உன்
எழில் உரு காட்டியிருக்கும் விநாயகனே! விற்பரனே!!

(திருமுருக அறிவுக்கன்பன்)

விநாயக வழிபாடு

"வாழ்வை வளமாய் அருள்வோனே"

பல்லவி

அரசமர நிழலில் அமரும் ஆண்டவனே!
ஆதி கணபதியே! வேத முதற்பொருளே! !

(அரசமர)

Koviloor Digital Library

அவல் பொரி படைத்து அன்புடன் தொழுதாலே
அருள்முதம் தரும் ஆலவாயன் மைந்தனே!

(அரசமர)

சரணம்

பரம்பொருள் நீ யென்று பணிவோர்க்கெல்லாம்
பக்கம் வரும் தீவினைகள் பறந்திடச் செய்வோனே!
கரங்கூப்பித் தலை வணங்கித் தெண்டனிட்டாலே,
வரந்தந்து வாழ்மை வளமாய் அருள்வோனே!

(அரசமர)

(அறிவுக்கும்பன்)

Koviloor Digital Library

ஸ்ரீ விக்னேஷாய நம:

சரவண ஜாதா நமோநம கருணைய தீதா நமோநம
சததள பாதா நமோநம அபிராம

தருண்க தீரா நமோநம நிருபமர் வீரா நமோநம
சமதள வூரா நமோநம ஜகதீச

பரம சொரூபா நமோநம சுரர்பதி பூபா நமோநம
பரிமள நீபா நமோநம உமைகாளி

பகவதி பாலா நமோநம இகபர மூலா நமோநம
பவுருஷ சீல நமோநம அருள்தாராய்

Kovilloor Digital Library

இரவியு மாகாச பூமியு மாரியு தாரைவானவ
ரெவர்களு மீடேற ஏழ்கடல் முறையோவென்

றிடர்பட மாமேரு பூதர மிடிபட வேதானிசாசர
ரிகல்கெட மாவேக நீடயில் விடுவோனே

மரகத ஆகார ஆயனு மிரணிய ஆகார வேதனும்
வசுவெனு மாகார ஈசனு மடிபேண

மயிலுறை வாழ்வே **விநாயக மலை**யுறை வேலா மகீதா
வனசர ராதார மாகிய பெருமாளே.

மேற்காணும் பாடல் ஸ்ரீ அருணகிரிநாதர் பாடிய
திருப் புகழ்ப் பாடலாகும்

Koviloor Digital Library

பிள்ளையார் வழிபாடு 108 போற்றி

திருச்சிற்றம்பலம்

ஓம் எனும் பொருளாய் உள்ளோய் போற்றி
பூமனும் பொருள் தொறும் பொலிவாய் போற்றி
அகரம் முதலென ஆனாய் போற்றி
அகர உகர ஆதி போற்றி

மகரமாய் நின்ற வானவ போற்றி
பகர்முன் னவனாம் பரனே போற்றி
மண்ணாய் விண்ணாய் மலர்ந்தாய் போற்றி
கண்ணுள் மணியாய்க் கலந்தாய் போற்றி
நீர்தீக் காற்றாய் நின்றாய் போற்றி

Koviloor Digital Library

பகலவன் நிலவாய்ப் பரந்தாய் போற்றி
நிகர்மீன் கணமாய் நிலைத்தாய் போற்றி
மழைபொழி இமய வல்லிசேய் போற்றி
தழைசெவி எண்தோள் தலைவ போற்றி

திங்கட் சடையோன் செல்வ போற்றி
எங்கட் கருளும் இறைவா போற்றி
அறுமுகச் செவ்வேட்கு அண்ணா போற்றி
சிறுகண் களிற்றுத் திருமுருக போற்றி
செம்பொன் மேனிச் செம்மால் போற்றி

உம்பர் போற்றும் உம்பல் போற்றி
பண்ணியம் ஏந்துகைப் பண்ணவ போற்றி
எண்ணிய எண்ணியாங் கிசைப்பாய் போற்றி
அப்பமும் அவலும் கப்புவாய் போற்றி
முப்புரி நூல் மார்பு அப்பா போற்றி

Koviloor Digital Library

எள்ளுருண்டை பொரி ஏற்போய் போற்றி
தெள்ளுறு தெவிட்டாத் தேனே போற்றி
மூவர்மொழியிடம் மொழிந்தாய் போற்றி
தேவர்க்கரிய தேவா போற்றி
மாலுக் கருளிய மதகரி போற்றி

பாலெனக் கடல்நீர் பருகினாய் போற்றி
பாரதம் எழுதிய பருஉக்கர போற்றி
மாரதம் அச்சொடி மதவலி போற்றி
மாங்கனி அரன்பால் வாங்கினோய் போற்றி
ஈங்கினி எம்பால் எழுந்தருள் போற்றி

கரும்பாயிரங் கொள் கள்வா போற்றி
அரும்பொரு ளோயெம் ஐயா போற்றி
தினைபால் கடந்த தேவே போற்றி
புணையாய் இடர்க்கடல் போக்குவோய் போற்றி
பேழை வயிற்றுப் பெம்மான் போற்றி

Koviloor Digital Library

அடியவர் உள்ளம் அமர்ந்தாய் போற்றி
அடிமலர் எம்தலை அணிவாய் போற்றி
திருநீற் றொளிசேர் செம்மால் போற்றி
இருவே றுருவ ஈசா போற்றி

உள்ளத் திருளை ஒழிப்பாய் போற்றி
கள்ளப் புலனைக் கரைப்பாய் போற்றி
நம்பியாண் டார்க்கருள் நல்குவாய் போற்றி
எம்பிரா னாக இசைந்தாய் போற்றி
உருகுவோ ருள்ளத் தொளியே போற்றி

பெருகருள் சுரக்கும் பெருமான் போற்றி
தம்பிக்கு வள்ளியைத் தந்தாய் போற்றி
உம்பர்கட் கரசே ஒருவ போற்றி
பிள்ளையார்ப் பெயர்கொண் டுள்ளாய் போற்றி
வள்ளலாய் நலங்கள் வழங்குவாய் போற்றி

Koviloor Digital Library

மூவாச் சாவா முதல்வா போற்றி
ஆவா எங்களுக் கருள்வாய் போற்றி
தமிழ்ச்சுவை சார்திருச் செவியாய் போற்றி
அமிழ்தாய் எம்மகத் தாளுய் போற்றி
மழவிளங் கன்றே மணியே போற்றி

குழவியாய்ச் சிவன்மடி குலவுவோய் போற்றி
பெருச்சா ளியூரும் பிரானே போற்றி
நரிச்செய லார்பால் நண்ணாய் போற்றி
செந்தா மரைத்தாள் தேவா போற்றி
நந்தா மணியே நாயக போற்றி

இருள்சேர் இருவினை எறிவாய் போற்றி
கரிமுகத் தெந்தாய் காப்போய் போற்றி
ஆங்கா ரம்முளை அறுப்பாய் போற்றி
பாங்கார் இன்பப் பராபர போற்றி
கற்றவர் விழுங்கும் கனியே போற்றி

Koviloor Digital Library

மற்றவர் காணா மலையே போற்றி
சொல்லொடு பொருளின் தொடர்பே போற்றி
கல்லும் கரைக்க வல்லோய் போற்றி
தொந்தி வயிற்றுத் தந்தி போற்றி
முந்திய பொருட்கும் முந்தியோய் போற்றி

ஐந்துகை யுடைய ஐய போற்றி
ஐந்தொழில் ஆற்றும் அமர போற்றி
அருளாய் அருள்வாய் ஆண்டவ போற்றி
தருவாய் மணமலர்த் தாராய் போற்றி
கயமுக அசுரனைக் காய்ந்தாய் போற்றி

மயலூரும் இன்ப வாழ்வே போற்றி
ஆனையாய்ப் புழுவாய் ஆனாய் போற்றி
பானை வயிற்றுப் பரமே போற்றி
கடம்பொழி யானைக் கன்றே போற்றி
மடம்ஒழி அறிவின் வளனே போற்றி

Koviloor Digital Library

பாலொடு தேனும் பருகுவோய் போற்றி
மேலொடு கீழாய் மிளிர்வாய் போற்றி
எய்ப்பில் வைப்பாய் இருந்தோய் போற்றி
மெய்ப்பொருள் வேழ முகத்தாய் போற்றி
நல்லார்க் கெட்டும் நாதா போற்றி

பொல்லா மணியே புராதன போற்றி
அறிவின் வரம்பை அகன்றாய் போற்றி
குறிகுணங் கடந்த குன்றே போற்றி
எட்டு வான்குணத் தெந்தாய் போற்றி
கட்டறு களிற்று முகத்தோய் போற்றி

மலரில் மணமாய் வளர்ந்தாய் போற்றி
அலர்கதிர் ஒளியின் அமர்வோய் போற்றி
ஓங்கா ரம்முகத் தொருத்தல் போற்றி
ஏங்கா துயிர்க்கருள் இயற்கை போற்றி
எண்ணும் எழுத்துமாய் இசைந்தாய் போற்றி

Koyiloor Digital Library

100 பண்ணும் பயனுமாய் அமர்ந்தாய் போற்றி
அருவே உருவே அருவுரு போற்றி
பொருளே பொருளின் புணர்ப்பே போற்றி
புகர்முகக் களிற்றுப் புண்ணிய போற்றி
அகலிடம் நிறைய அமர்ந்தோய் போற்றி

105 செல்வம் அருள்க தேவா போற்றி
நல்லன எமக்கருள் நாயக போற்றி
ஆக்கமும் ஊக்கமும் அருள்வாய் போற்றி

108 காக்களங் களையுன் கழலிணை போற்றியே

தென்னா டுடைய சிவனே போற்றி
எந்நாட் டவர்க்கும் இறைவா போற்றி

Koviloor Digital Library

அன்பளிப்பு

திரு. எம். எஸ். கந்தசாமி

உரிமையாளர்:

லலிதா நகை மாளிகை,

125, உஸ்மான் ரோடு, தியாகராய நகர்,

சென்னை

KOVILOOR MADALAYAM
KOVILUR-630 307
MANAGIRI VIA

Koviloor Digital Library

இந் நூல் கிடைக்குமிடம் :

திரு என். சுந்தரம் அய்யர்,

மேலாளர்,

அருள்மிகு கற்பகவிநாயகர் தேவஸ்தானம்

பிள்ளையார்பட்டி

தி சௌத் இந்தியா பிரஸ், காரைக்குடி-623 001